# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-12238/SCIC/2019**

திரு கார்திகேயன் .. மேல்முறையீட்டாளர்
தொழிலாளர் உதவி ஆய்வாளர்
சீர்காழி.

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
தொழிலாளர் இணை ஆணையர்
ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை பொது அதிகார அமைப்பு
அலுவலக கட்டிட வளாகம்
2ம் தளம்,
செங்குளம் காலனி.
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி 20.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 25.07.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் தன் மீது மற்றும் தொழிலாளர் துறை சார்நிலை அலுவலர்கள் சங்கம் மாநில பொது செயலாளர் என்ற முறையில் புகார்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றின் நகல்களை வழங்குமாறு தெரிவித்துள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 29.08.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அளித்துள்ளார்.

2. இதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 20.09.2019 அன்று முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். இதற்கு மேல்முறையீட்டு அலுவலர் 01,11,2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். அதன் பிறகு மனுதாரர் பிரிவு 19(3)-ன்கீழ் 30.11.2019 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 09.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 25.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

4. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் ந.க. எண். ஆ5/6638/19 நாள் 23.09.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கியதாக தெரிவித்துள்ளார் (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 11.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-12238/SCIC/2019</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்
தொழிலாளர் இணை ஆணையர்
ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை
அலுவலக கட்டிட வளாகம்
2ம் தளம்,
செங்குளம் காலனி.
மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி 20.

**<u>மனுதாரர்</u>**

திரு கார்த்திகேயன்
தொழிலாளர் உதவி ஆய்வாளர்
சீர்காழி

JJ/PA 12.11.2020

பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

SA 12238 /19 copy

தொழிலாளர் துறை

அனுப்புநர்
திரு. த. தர்மசீலன்,
பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்,
ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை
அலுவலக கட்டிட வளாகம், 2-ம் தளம்,
செங்குளம் காலனி, மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி-20.

பெறுநர்
திரு. ம. கார்த்திகேயன்,
தொழிலாளர் உதவி ஆய்வர்,
தென்பாதி,
சீர்காழி.

TAMIL NADU INFORMATION COMMISSION
25 SEP 2020
030482
CHENNAI-600 018

ந.க. எண். ஆ5/ 6638 /19, நாள் .09.2020

ஐயா,

பொருள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில தகவல்கள் கோரியது - தொடர்பாக

பார்வை
1. திரு. ம. கார்த்திகேயன், சீர்காழி, தொழிலாளர் உதவி ஆய்வரின் மனு நாள் 25.07.19.
2. தமிழ்நாடு தகவல் ஆணையம், மாநில தலைமை தகவல் ஆணையரின் ஆணை எண்.SA 12238/ மா.த.த.ஆ/2019, நாள் 09.09.2020

------

பார்வை (2)ல் காணும் சென்னை, தமிழ்நாடு தகவல் ஆணையரின் ஆணையின்படி, இப்பொருள் குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு, புகார்களின் குறித்த நகல்கள் 1 முதல் 24 வரை உள்ள பக்கங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு - மேற்கூறியவாறு.

பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்,
23.9.20 திருச்சிராப்பள்ளி.

நகல பணிந்தனுப்பப்படுகிறது.
1. மாநில தலைமை தகவல் ஆணையர், (பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்) தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை.
2. தொழிலாளர் ஆணையர், சென்னை.
3. கூடுதல் தொழிலாளர் ஆணையர், திருச்சி.

D:\A-1 Files\A1-D\RTI Act\RTI.doc

1

அனுப்புநர்

கு. இளங்கோவன்,
முத்திரை ஆய்வாளர்,
மயிலாடுதுறை.

4883
30 AUG 2018

பெறுநர்

தொழிலாளர் இணை ஆணையர்,
திருச்சி.

அய்யா,

பொருள்: புகார் மனு. - திரு. M. கார்த்திகேயன், தொழிலாளர் உதவி ஆய்வர் சீர்காழி - மயிலாடுதுறையில் அரசுப் பணி செய்ய பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக குறுக்கீடு - தற்போது மயிலாடுதுறையில் முத்திரை ஆய்வாளராக பணிபுரிய மாமூல் கேட்டு மிரட்டுதல் - நடவடிக்கை எடுக்கவேண்டி - மனு சமர்ப்பித்தல் - தொடர்பாக.

-----------

நான் 1-12-17 முதல் மயிலாடுதுறையில் முத்திரை ஆய்வராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்னர் பாபநாசத்தில் முத்திரை ஆய்வராகவும், மயிலாடுதுறையில் உதவியாளராகவும், உதவி ஆய்வர் -1ம் சரகமாகவும் பணிபுரிந்துள்ளேன். இத்துறையில் 11-10-94 முதல் இன்றளவும் சிறு பிழையின்றி தண்டனை இன்றி பணிபுரிந்து வருகின்றேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வராக தற்போது பணிபுரியும் திரு. M. கார்த்திகேயன் அவர்களை எனக்கு கடந்த 20 ஆண்டுகளாக தெரியும். சக பணியாளர்கள் மீது பொய் புகார் அளிப்பது, பிறப்பு, சாதி குறித்து கேவலமாக பேசுவது, அடியாட்களை வைத்து கொலை செய்து விடுவேன் என மிரட்டுவது, வெளி நபர்களை அழைத்து வந்து அலுவலகத்தில் மது அருந்துவது, தவறை சுட்டிக்காட்டினால் மொட்டை பெட்டிசன் போடுவது, தனது பணபலத்தை வைத்து மாறுதல் என்ற பெயரில் வெளியூருக்கு தூக்கி அடிப்பது, இவருக்கு மாமூல் கொடுப்பவர்களை, அவருடைய தேவைகள் அனைத்தையும் அலுவல் சார்ந்த மற்றும் சொந்த தேவைகளை பெற்று தருபவர்களை தனது அடிமைகள் என பட்டப்பெயர் சூட்டி மகிழ்ந்து தன்னை சுற்றி

--2--

Scanned by CamScanner

உள்ள அலுவலகங்களில் பணி புரிவது போல மாறுதல் பெற்று தந்து தனக்கு சாதகமாக சூழ்நிலையை அமைத்துக்கொள்வது இவரின் தலைசிறந்த ராஜதந்திர பணியாகும். இவர் மயிலாடுதுறையில் உதவியாளராக பணிபுரிந்தபோது இவரின் குறுக்கீடு தொல்லைகள் எல்லை மீறி போகவே அப்போதைய திருவாரூர் தொழிலாளர் ஆய்வாளர் திரு. சுரேந்திரன் அவர்களால் நேர்முக கடிதம் மூலம் இவரை மாறுதல் செய்ய பரிந்துரைக்கப்பட்டது. இவர் ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒரு நபரை Spy வைத்திருப்பார். தினசரி இவர்களுடன் அலைபேசியில் தொடர்பு கொள்வார். இப்படி தகவல் பெற்று சீர்காழியில் உதவியாளராக பணிபுரிந்த திரு. கண்ணதாசன் இடம் Mutual பெற்று சீர்காழிக்கு மாறுதலில் சென்று என்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது, தொழிலாளர் ஆய்வரின் DO Letter-ஐ உடைத்துவிட்டேன் என இறுமாப்புடன் செயல்பட்டார். பிறகு திரு. கண்ணதாசனை திருவண்ணாமலைக்கு மாறுதல் செய்து மயிலாடுதுறைக்கு உதவியாளராக வந்து உயர் அலுவலருக்கு டிரைவராக எக்ஸ்ட்ரா பணி செய்து தொழிலாளர் துணை ஆய்வர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் திரு. லேட். மு. கௌதமனை பணி நீக்கம் செய்ய காரணமாக இருந்து சாதனை புரிந்தார் என பேசப்பட்டது.

இரவு, பகல் கொட்டும் மழை, கொளுத்தும் வெயில், பனி என பாராமல் இவருக்கு [redacted] பென்ஷனைத் வாங்கிக் கொடுத்து வீட்டு கரண்ட்பில், வீட்டு வரி, தண்ணீர் வரி கட்டிக்கொடுத்து பணி செய்த இரவு காவலர் மீது பொய் புகார் அளித்து துணை ஆய்வரால் விசாரணை செய்யப்பட்டது. இவரின் சாதனை 2 என பேசப்பட்டது.

மயிலாடுதுறை முத்திரை ஆய்வர் அலுவலகத்தில் முத்திரைக் கொல்லராக பணிபுரிந்த திரு. ஆரோக்கியராஜ் மீது பழுது பார்ப்பவர் Letter Pad-ல் பொய் புகார் தயார் செய்து ஈரோடு மாவட்டம் பவானிக்கு மாறுதல் பெற்று தந்தவர் - சாதனை 3 எனப் பேசப்பட்டது.



Scanned by CamScanner

2009-10ம் ஆண்டில் மயிலாடுதுறை தொழிலாளர் உதவி ஆய்வர் 1ம் சரகமாக பணிபுரிந்த திரு. நந்தன் முன்பாக அலுவலகத்திலேயே மது அருந்தியதால், தான் தூக்கி வளர்த்த குழந்தை தனக்கு முன்பாக மது அருந்துகிறதே என்ற ஆதங்கத்தில் கேட்ட அவர் மீதும் பொய் புகார் லஞ்ச ஒழிப்பு துறைக்கு அனுப்பப்பட்டு மயிலாடுதுறையில் பணி செய்ய தடுக்கப்பட்டு, பத்திரிக்கையில் செய்தி போட்டுவிடுவேன் என மிரட்டப்பட்டு, விடுமுறையில் சென்று ஓய்வு பெற்றார். இது சாதனை 5 ஆக பேசப்பட்டது.

தனக்கு சாதகமாக இல்லை என்ற காரணத்தால் தொழிலாளர் ஆய்வர் திரு. அசோகன் அவர்களுக்கே மாறுதல் பெற்று தந்தோம். தூக்கி அடித்தோம் என பெருமை பேசினார் என சாதனை 6 ஆக பேசப்பட்டது.

மயிலாடுதுறை தொழிலாளர் துணை ஆய்வாளர் பதவிக்கு தொடர்ச்சியாக வெளியூரில் இருந்து வரும் பெண் பணியாளர்கள் மாறுதலில் வரும் சூழ்நிலையை உருவாக்கி பெட்டிசன் போடுவேன். ஒழுங்காக ஓய்வு பெற விடமாட்டேன். இரவு நேரங்களில் அலைபேசியில் மிரட்டல் இப்படி துணை ஆய்வர் அலுவலகத்தை கடந்த 6 ஆண்டுகளாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். மயிலாடுதுறையில் துணை ஆய்வாளர். திருமதி. ராதை யார் யாரோ, இரவில் அலைபேசியில் மிரட்டுகிறார்கள் என கண்ணீர் விட்டு பிறகு பணி ஓய்வில் சென்றார். திருமதி. தையல்நாயகிக்கும் இதே நிலை தான். தாக்குதலை, மிரட்டலை சமாளிக்க முடியாமல் VRS விண்ணப்பித்து பின்பு வாபஸ் பெற்று விடுப்பில் சென்ற பின் ஓய்வில் சென்றார். சாதனை 7 ஆக பேசப்பட்டது.

ஒரு தொழிலாளர் உதவி ஆய்வாளருக்கு மயிலாடுதுறை முத்திரை ஆய்வராக கூடுதல் பொறுப்பு பெற்று தந்து மாதா மாதம் மாமூல் பெற்று வந்தார் என டீலர் திரு. சங்கர், ரிப்பேரர் [redacted], திரு. மனோகர், திரு. பாஸ்கர்

-4-

Scanned by CamScanner

மயிலாடுதுறை முத் ளர் திருபுவனம்' உனக்கு



மற்றும் பலர் சொல்வதை கேட்க முடிந்தது. இளநிலை உதவியாளரை கையில் வைத்துக் கொண்டு எதிர்மறையாக சொல்லிக் கொடுத்ததன் பலனாக மயிலாடுதுறை முத்திரை ஆய்வர் அலுவலகத்தில் எடமணல் அங்காடிக்கு TR போடாமலே CV போடப்பட்டுள்ளது. CV. No.1249019 date 25-5-17 திரு. R. பழனியாண்டி மளிகை கடை, தேரழுந்தூர் என்ற வணிகருக்கு CV போடாமல் TR போடப்பட்டுள்ளது. TR No.1177945 date 25-5-17. 27-6-17ல் ரூ.30775/- பதிலாக ரூ.31287/- ரூ.512/- கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. 28-7-17ல் வரவு ரூ.16810/- ரூ.16840/- அதாவது ரூ.30/- கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 10-7-17 முதல் 21-7-17 முடிய முத்திரை ஆய்வரால் மருத்துவ விடுப்பு என வருகை பதிவேட்டில் எழுதப்பட்டுள்ளது. அதே சமயம் இளநிலை உதவியளர் திரு. ஜி. வினோத் கையொப்பம் இட்டு பிறகு அழித்துள்ளார். இப்படியாக இளநிலை உதவியாளரின் துணையோடு முத்திரை ஆய்வரை தவறு செய்யவைத்து, சிக்கல் உண்டாக்கி தனது கட்டுப்பாட்டில் வைத்து மாத மாமூல் பெற்று வந்தார் என்று டீலர், பழுது பார்ப்பவர் கூறும் கூற்று உண்மை தான் என எண்ண வைத்து சாதனை 8 ஆக பேசப்பட்டது. மேலும், [illegible] ரூ.6000/- [illegible] மயிலாடுதுறை தொழிலாளர் உதவி ஆய்வர் 1ம் சரக நியாயவிலை கடைகளை கையில் எடுத்து இரவு காவலரை பணம் கேட்டு விரட்டி மிரட்டி படுத்தியபாட்டில் அன்னார் கொடுத்த டார்ச்சரில் அவர் ஒரே நாள் மாலையில் அவராகவே கருருக்கு மாறுதல் பெற்று மயிலாடுதுறையை விட்டு ஓடவைத்தார். இது சாதனை 9 ஆக பேசப்பட்டது.



Scanned by CamScanner

மயிலாடுதுறை முத்திரை ஆய்வராக பணிபுரிந்த இராஜராஜனை உன் சொந்த ஊர் திருபுவனம் உனக்கு இங்கு என்ன வேலை முத்திரை ஆய்வர் சீட்டை விட்டு காலி செய் என மது அருந்தி விட்டு தகராறு செய்தார். திரு. இராஜராஜன் தன் மனைவியின் உடல்நலக் கோளாறு (ஆப்ரேஷன் செய்தவர்) தனக்கும் உடல்நலக் குறைவு என சிதம்பரம் அல்லது தஞ்சாவூர் மாறுதல் கோரியபோது அவரது சொந்த ஊரான திருபுவனத்தில் இருந்து பட்டுக்கோட்டையும், சிதம்பரமும் ஒரே தூரம் தான் என சொல்லவேண்டியவரிடம் சொல்லி பட்டுக்கோட்டைக்கு மாறுதல் கிடைக்கச் செய்து தொடர்ச்சியான உடல்நல குறைவால் தஞ்சை மீனாட்சி மருத்துவமனையில் ஆப்ரேஷன் செய்து அவதிப்பட்டார். இது சக பணியாளருக்கு செய்த கருணை சாதனை 10 ஆக பேசப்பட்டது.

கும்பகோணம் முத்திரை ஆய்வர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு. பன்னீர் தான் சென்னையில் வண்டலூர் மிருக காட்சி சாலைக்கு எதிரில் வாங்கிய அபார்ட்மெண்ட் குறித்து புகார் எழுதிப் போட்டார் என நினைத்து மன்னார்குடிக்கு மாற்றியது சாதனை 11 ஆக பேசப்பட்டது.

கும்பகோணத்தில் முத்திரை ஆய்வாளராக பணிபுரிந்தபோது இரவு காவலரிடம் முத்திரை தொடர்பான அனைத்து பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டு TR & CV-ல் ஒப்பம் மட்டுமே செய்வார் என அனைவராலும் பேசப்பட்டு, சாதனை 12ஐ செய்தார்.

2014ம் ஆண்டு தீபாவளிக்கு முதல் நாள் மது அருந்தி வாகனம் ஓட்டியது தொடர்பாக போக்குவரத்து காவல்துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அடுத்த நாள் கோர்ட்டில் தண்டத் தொகை செலுத்தி வாகனம் மீட்கப்பட்டது சாதனை 13 ஆக பேசப்பட்டது.

--6--

Scanned by CamScanner

Sea Lion Packaged Drinking Water கம்பெனி வள்ளாலகரம், மயிலாடுதுறை உரிமையாளர் திரு. பரசுராமனிடம் சுயநல நட்பு, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, வட்டிக்கு பல லட்சம் கொடுத்து, பின் பார்ட்னர்ஷிப் பெற்று, தொடர்ச்சியாக அவரின் கம்பெனியை அடைய உரிமையாளர் மிரட்டப்பட காவல்நிலையம், கட்டபஞ்சாயத்து என்ற நிலைக்கு சென்றபின் பழைய உரிமையாளருக்கே கம்பெனி சென்றது இச்சாதனை 14 மயிலாடுதுறை முழுவதுமே பேசப்பட்டது.

சேந்தங்குடி ஸ்ரீ பத்மாவதி நகரில் தன் வீட்டிற்கு எதிரே குடியிருக்கும் பிராமணரை கட்டிலில் இருந்து கீழே தள்ளி அடிக்கச்சென்று, குடிபோதையில் கொலை செய்து விடுவேன் என மிரட்டி, காவல்நிலையம் சென்று ரிப்போர் ஒருவர் மூலம் விடுவிக்கப்பட்டார் இச்சாதனை 15 ஆக பேசப்பட்டது.

1-8-14 நெற்றிக்கண் கும்பகோணம் தொழிலாளர் துறையில் கட்டிங் கார்த்திக் அட்டகாசம் என்று தலையங்கள் அளித்து கௌரவித்ததது சாதனை 16 ஆக பேசப் பட்டது.

சென்னை மவுண்ட் முத்திரை ஆய்வாளராக மாறுதல் பெற்று, பிறகு சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வாளராக மாறுதல் என 19-1-18 நெற்றிக்கண் செய்தி - சாதனை 17 ஆக பேசப்பட்டது.

மேலும் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான் நாகப்பட்டினம் முத்திரை ஆய்வாளராக பணி மாறுதல் கோரியபோது இந்த மாவட்டத்திலேயே என்னை பணி செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் என் மீது பொய் புகார் அதாவது கையொப்பம் இல்லாத இப்படிக்கு வணிகர் என எழுதப்பட்ட மொட்டை பெட்டிசனை அனுப்பி எனது மாறுதல் விண்ணப்பத்தை பணபலம், ஆள் பலம் மூலம் நிராகரிக்கச் செய்து சாதனை 18-ஐ புரிந்தார்.

--7--

Scanned by CamScanner

தற்போது இவர் சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வராக பணியேற்ற நாளிலிருந்து, மயிலாடுதுறை முத்திரை ஆய்வராகிய நான் தினசரி எனது அலுவலகப்பணியை செய்ய முடியாமல் மிரட்டப்படுகின்றேன். ஆள் வைத்து அடித்துவிடுவேன், கொலை செய்து விடுவேன், குடும்பத்தோடு வேறு ஊருக்கு சென்று விடு. அல்லது மயிலாடுதுறையில் பணிபுரியவேண்டும் என்றால் மாமூல் கொடு விட்டுவிடுகின்றேன். நான் ஒரு நபர் அல்ல சங்கத்தின் செயலாளர். உன்னை ஒழித்து உன்னையும், உன் குடும்பத்தையும் நடுரோட்டுக்கு கொண்டு வருவேன் என கொக்கரிக்கின்றார். நீ ஒரு SI தான் எனக்கு மாத மாமூல் கொடுக்காதவர். கொடுத்து விடு. இல்லையேல் இன்னும் உனக்கு அலுவலக ரீதியாக தொல்லைக் கொடுப்பேன் என மிரட்டுகிறார். ஏற்கனவே அவரது மிரட்டலால் அனுமதி பெற்று, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் பெற்று அவரது வீட்டிற்கு அருகிலே வீடு கட்டிய பாவத்திற்கு சொந்த வீட்டை விட்டு ஒதுங்கி வந்து வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். வீட்டில் கேமராவை வைத்து எனது வீட்டு சந்து, வாசல் நோக்கி திருப்பி வீட்டில் உள்ளவர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கின்றார். வீட்டில் உள்ளவர்கள் பெண்கள் பாதுகாப்பு, தனிமை, சுதந்திரம் பறிக்கப்படுவதாகவும், பய உணர்வுடன் வாழவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

என் அலுவலக இளநிலை உதவியாளர் திரு. கோ. வினோத்-ஐ தினசரி அலைபேசியில் தொடர்புகொண்டு, அலுவலக தினசரி நடவடிக்கைகளை செய்தியாக பெற்றுக் கொண்டு மயிலாடுதுறையில் ஒவ்வொரு அலுவலரும் மிரட்டப்படுகின்றோம். தவறாக முத்திரை கட்டண பதிவேடு எழுத, குறைவாகவோ அல்லது அதிகமாகவோ வங்கியில் பணம் செலுத்த அவ்வப்போது இளநிலை உதவியாளருக்கு ஆலோசனைகள் அலைபேசியில் வழங்கி வருகின்றார். என் இளநிலை உதவியாளரால் அலுவலகப்



Scanned by CamScanner

பதிவேடு, ஆவணங்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்படுகிறது. ஒரு ரிப்பேரர் மு... என் இளநிலை உதவியாளரிடம் நீ ஏன் வாராந்திர அறிக்கை தயார் செய்து ...தைக்கவேண்டும். முத்திரை ஆய்வர் செய்யமாட்டாரா? என்றும், வங்கிக்கு பணம் செலுத்த நீ போகாதே என்றும் கூறி அவரை பின்புறம் இருந்து இயக்கி அலுவலகப்பணிக்கு தூய நிர்வாகத்திற்கு முட்டுக்கட்டை போட நினைக்கின்றார். மேலும் பணிப்பதிவேடு ஒன்று வாங்கி உங்கள் பணித்தொடர்பான விவரங்களை பதிவு செய்து பராமரித்து வரவேண்டும் என பலமுறை நேரில் அறிவுறுத்தியும் இளநிலை உதவியாளர் செய்யவில்லை. இதனை அறிவுறுத்தி குறிப்பாணை ந.க.A2/18 நாள்: 19.4.18 வழங்கப்பட்டது. சமீபத்தில் அவரின் மேஜை மீது இருந்த பணிப்பதிவேட்டை நான் ஏதேச்சையாக பார்த்தபோது திரு. எம். கார்த்திகேயன் அவர்களால் பதிவுகள் செய்யப்பட்டு முத்திரை ஆய்வரின் கையொப்பம் பெறப்படாமல் உள்ளது. திரு. எம். கார்த்திகேயன், திரு. ஜி. வினோத் இவர்களின் தொடர்புக்கு இதுவே சான்றாகும்.

சமீபகாலமாக TN LMCTS GROUP-ல் CV-க்களை வெளிவிட்டு அலுவலக சீல் இல்லை. பெயர் இல்லை என அடுத்த கட்ட மிரட்டலுக்கு சென்றுள்ளார். இவர் கும்பகோணம் முத்திரை ஆய்வராக பணிபுரிந்தபோது இதே குறைபாடுகள் உள்ள CV என்னிடம் உள்ளது. TN LMCTS GROUP- ல் அலுவலர்கள், பொது மக்கள், துறை செய்திகள், நுகர்வோர் நலன் குறித்து பயன்பெற வேண்டிய விவாதிக்க வேண்டிய கருத்துக்கள் இருக்க சிறு தவறை சுட்டிக்காட்டி திருத்திக்கொள்ள தலைமை பொறுப்பில் உள்ளவர் வழிகாட்டவேண்டுமே தவிர ஒரு சிறு தவறை ஊதி பெரிதாக்க நினைக்கும் இவர் ஒரு சார்நிலை அலுவலர்கள் சங்க செயலாளர்? தலைமை பொறுப்பில் இருக்கும் நபருக்கு தலைமை பண்பு இருக்கவேண்டுமே? இனி ஒவ்வொரு ஊரிலும் இப்படி நடக்க இவர் முன் உதாரணமாக திகழ்ந்து துறைக்கு மகத்தான சாதனை புரிந்துள்ளார். இதனை சார்நிலை அலுவலர்கள் சங்க மாநில தலைவர் திரு. ராமதாஸ் மாநிலத் துணை செயலாளர் திரு. குணசீலன் ஆகியோரின் கவனத்திற்கு நான் கொண்டு சென்றுள்ளேன். எனக்கு உரிய நீதி கிடைக்கவில்லை எனில் அரசு ஊழியர் சங்கம், அரசு அலுவலர் ஒன்றியம், அரசுப் பணியாளர் சங்கத்தில் முறையிடலாமா என யோசிக்கவேண்டிய சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்.

மேலும், சில ரிப்பேரரின் பெயரைச் சொல்லி அவர்களிடம் லஞ்சம் கொடுத்து மாட்டிவிடப் போகின்றேன் என மற்றொரு ரிப்பேரரிடம் மிரட்டலாக அறைகூவல் விடுத்துள்ளார்.

–9–

Scanned by CamScanner

இப்படி என்னை தொடர்ச்சியாக தொல்லைகள் கொடுத்து என் அரசு பணியை அழிக்க, ஒழிக்க, என்னை பழிவாங்க துடிக்கின்றார். மயிலாடுதுறையை விட்டு விரட்ட ஆர்வம் மிகுதியில் அலைகின்றார். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் உயிர் பாதுகாப்பற்ற நிலையில் மன உளைச்சலாகி மிகவும் பாதிப்படைந்துள்ளேன். இது தொடர்பாக இருக்கும் ஆதாரங்களை தேவைப்படின் இறுதியாக காண்பிக்க தயாராக இருக்கின்றேன் என்பதையும், விசாரணை செய்து எனக்கு உரிய நியாயம், நீதி வழங்கவேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மயிலாடுதுறையில் எந்தவிதமான பதவியிலும் இல்லாமல், மாறுதல், பொய் புகார், ஆட்களை வைத்து கொலை செய்து விடுவதாக மிரட்டுதல், பழிவாங்குதல் மூலம் தனது சொந்த தேவையான பணம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு மயிலாடுதுறை தொழிலாளர் துறையில் தார்மிக அடிப்படையில் தன்னுடைய பலத்தை, அதிகாரத்தை நிலைநிறுத்த முயற்சி செய்து, தொழிலாளர்களுக்காக பணி செய்யும் மயிலாடுதுறை தொழிலாளர் துறை சக பணியாளருக்கு துரோகம் செய்து, அலுவலகத்தின் தூய நிர்வாகத்தை சீர்குலைக்கும் இவரின் மீது நடவடிக்கை எடுத்து துறையை பாதுகாக்கவும், என்னைப்போல் ஒரு சராசரி சாமானிய அரசு ஊழியரை அவர் தம் குடும்பத்தை பாதுகாக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

16/8/18

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

தொழிலாளர் உதவி ஆணையர், (அ)
திருவாரூர்.

Scanned by CamScanner

11

கு.இளங்கோவன்
முத்திரை ஆய்வாளர்
முத்திரை ஆய்வாளர்
மயிலாடுதுறை

முத்திரை ஆய்வாளர் அலுவலகம்,
மயிலாடுதுறை.

4282 30 AUG 2018

ந.மு.க.எண்.29/18 நாள்: .08.2018

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள்: பணிக்குழு - தொழிலாளர் துறை - திரு.கோ.வினோத் இளநிலை உதவியாளர், முத்திரை ஆய்வாளர் அலுவலகம், மயிலாடுதுறை - வங்கிக்குச் சென்று அரசு பணத்தை செலுத்த மறுத்தல் - அலுவலகப்பணி செய்யாமை தூய நிர்வாகத்திற்கு பங்கம் ஏற்படுத்துதல் - தொடர்பாக.

---

நான் 01.12.2017 முதல் மயிலாடுதுறை முத்திரை ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இவ்வலுவலகத்தின் இளநிலை உதவியாளர் திரு.கோ.வினோத் 09.11.2016 முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகின்றார். நான் பணியேற்ற நாளிலிருந்து அலுவலக பணி செய்வதில் இவர் முழுமையாக ஒத்துழைக்க வில்லை. சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருவதில்லை, தினசரி அலுவலகப் பணிகளான தபால்களுக்கு முத்திரையிட்டு அலுவலரின் பார்வைக்கு வைத்து தன் பதிவேட்டில் பதிவு செய்து நடவடிக்கை எடுத்து உயர் அலுவலருக்கு அறிக்கை உரிய நேரத்தில் அனுப்புவதில்லை. வணிகர்களை அலட்சியம் செய்து சரிவர பதில் கூறாமல் காலதாமதமாக மறுபரிசீலனைச் சான்று தயாரித்து அளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளார். காலமுறை அறிக்கைகள் காலதாமதமாக தயாரிப்பது குறிப்பாக வாராந்திர அறிக்கைகள் தயாரிப்பது என் பணி அல்ல என மறுத்து வருகிறார். இது இவருக்கு அரசு பணியில் ஆர்வமின்மையையும் பொறுப்பற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது. இங்கு முன்னர் பணிபுரிந்து முத்திரை ஆய்வரும், இவரின் பணி திருப்தியாக இல்லை என வாய்மொழியாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த 07.08.2018 அன்று முத்திரைக்கட்டணம் ரு.10660/- யை வங்கியில் செலுத்திவிட்டு வாருங்கள் என்று சொன்னபோது முடியாது இது என்னுடைய பணி அல்ல என மறுத்துவிட்டார். இத்தகவலை தொழிலாளர் உதவி ஆணையர் (அ) அவர்களுக்கு அலைபேசி மூலம் தெரிவித்துவிட்டு, நானே வங்கிக்கு சென்று பணம் செலுத்திவிட்டு வந்தேன், பின்னர் செலுத்துச்சீட்டு பதிவேட்டை பூர்த்தி செய்ய எடுத்து பார்த்தபோது அன்று அவர் வங்கிக்கு சென்று பணம் செலுத்தி வந்ததாக கையொப்பம் இட்டுள்ளார். தொடர்ச்சியாக 13.08.2018 அன்று ரு.6365/-யை வங்கிக்கு சென்று செலுத்திவிட்டு வாருங்கள் என்று சொன்னபோது தன் தவறை திருத்திக்கொள்ள மனம் இல்லாத அவர் மீண்டும் வங்கிக்கு செல்ல முடியாது, எனது பணி அல்ல என மறுத்து வீண் வாதம் செய்து அலைபேசியில் ஒரு மூன்றாவது நபருடன் பேச அலுவலகத்தின் வாசலுக்கு சென்றுவிட்டார். இது இவருடைய பொறுப்பின்மையையும், அலுவலப்பணியில் அக்கறையின்மையையும், உயர் அலுவலரின் பேச்சை உதாசினப்படுத்தும் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும் முத்திரைக் கட்டணப்பதிவேட்டில் பல நாட்களில் தொகையை கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ எழுதுவதை பழக்கமாக கொண்டுள்ளார். இது அன்னார் உள்நோக்கத்துடன் செயல்படுகிறார் என எண்ணத் தோன்றுகிறது. அடிக்கடி மூன்றாவது நபருடன் அலுவலக நேரங்களில் அலைபேசியில் பேசி அவருடைய ஆலோசனைகளைப் பெற்று அதன்படி நடப்பதால் அலுவலகப் பணிக்கும்,

Scanned by CamScanner

தூய நிர்வாகத்திற்கும் இடையூறு, குந்தகம் விளைவிக்கும்படியாகவே அவருடைய செயல்பாடுகள் உள்ளது.

கடந்த 7 மாதங்களாக தன்பதிவேடு, தொடர்புடைய பிற பதிவேடுகள் பராமரித்து ஆஜர் செய்யவில்லை. இது தொடர்பாக அன்னாருக்கு ந.க.எண்.29/18 நாள்:10.08.2018ன் படி குறிப்பாணை வழங்கியுள்ளேன். நேரில் பலமுறை ஆலோசனை வழங்கியும், சொல்லிக் கொடுத்தும் அரசு பணியின் முக்கியத்துவம் அறிந்து செய்ய மறுக்கின்றார். மேலும் அலுவலகப் பதிவேடுகளில் அலுவலரின் அனுமதி இல்லாமல் திருத்தம் செய்துவிடுவார் என முன்பு இங்கு பணிபுரிந்தவர்கள் மூலம் கேள்விப்பட்டதை நிரூபிக்கும் விதமாக 11.07.2018 அன்று முத்திரைக்கட்டணப் பதிவேட்டில் அவர் செய்த கூட்டுத்தொகை தவறினை சரிசெய்து (சுழித்து) சரியான தொகையை நான் எனது கையால் எழுதியதை எனக்கு தெரியாமல் ஒயிட்னர் வைத்து மறைத்து தனது தவறை மறைக்க முயல்கிறார். இவரை நம்பி அலுவலகப் பதிவேடுகள் வழங்கும் நம்பகத்தன்மையை வலுவிழக்குமாறு செயல்படுகிறார்.

மேலும் மயிலாடுதுறை அலுவலகத்திற்கு தொடர்பில்லாத மூன்றாவது நபர் தனது கட்டுப்பாட்டில் அலுவலகம் இயங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக திட்டமிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளான, பணிபுரிபவர்கள் மிரட்டப்படுவது, பொய் புகார்களுக்கு உட்படுத்தப்படுவது, பெண் பணியாளர்கள் இரவு நேரங்களில் தொலைபேசி அலைபேசி மூலம் அநாகரிகமான வார்த்தைகளால் திட்டப்படுவது, அலுவலகப்பணி செய்யவிடாமல் தடுக்கப்படுவது, ஒழுங்காக ஒய்வு பெறவிடமாட்டோம் என மிரட்டப்படுவது, கடைசி ஆயுதமாக மாறுதல் செய்யப்படுவது இது கடந்த காலங்களில் நான் உட்பட இங்கு பணிபுரிந்து ஒய்வு பெற்றவர்கள் மற்றும் பலர் அனுபவித்த அறிந்த உண்மை. மேற்படி நபருக்கு துணைபோகும்படி இவர் செயல்படுவதாக வணிகர்கள், பழுதுபார்ப்பவர் வாய்மொழியாக தெரிவிப்பதால் அலுவலக நிர்வாகத்திற்கு பங்கம் ஏற்படுமோ என அஞ்சுகின்றேன்.

முத்திரை ஆய்வர் பணி தினசரி வணிகர்களுடன் தொடர்புடைய பணி. நான் இப்பணியினை தவிர மன்னார்குடி முத்திரை ஆய்வர், தொழிலாளர் உதவி ஆய்வர் 1-ம் சரகம் பணிகளையும் கூடுதலாக கவனித்து வரும் நிலையில், இவ்வலுவலகத்தில் முத்திரைக் கொல்லர், அலுவலக உதவியாளர், காவலர் பணியிடமும் காலியாக உள்ள சூழ்நிலையில் மயிலாடுதுறை முத்திரை ஆய்வாளர் அலுவலகத்திற்கு வேறு ஒரு இளநிலை உதவியாளரை பணியமர்த்தியும் திரு.கோ.வினோத் அவர்களை வேறு இடத்திற்கு பணிமாறுதல் செய்து உதவிடும்படியும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

பெறுனர்:

திரு.?.பாஸ்கரன்,
தொழிலாளர் உதவி ஆணையர் (அ),
திருவாரூர்.

நகல் சமர்பிக்கப்படுகிறது:
தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள்,
திருச்சி.

Scanned by CamScanner

அனுப்புநர்:-

பழுதுபார்ப்பவர் நல சங்கம்,
கும்பகோணம்.

பெறுநர்:-

உயர்திரு, தொழிலாளர் துறை ஆணையர் அவர்கள்,
சென்னை.

6454
30 NOV 2018

A1

அய்யா,

பொருள்:- கும்பகோணம் முன்னாள் முத்திரை ஆய்வாளர் திரு.M.கார்த்திகேயன் என்பவர் மீது புகார் மனு அளித்தல் - தொடர்பாக.

-----

நாங்கள் கும்பகோணத்தில் பழுது பார்ப்பவர் உரிமம் பெற்று முத்திரை பணி செய்து வருகின்றோம். தற்போது கிளாஸ்-II வகை தராசு முத்திரையிட நகை கடை உரிமையாளர்களை ஸ்தல முத்திரையிட வேண்டும் அதற்கு ரூ.400/- பணம் கட்டவேண்டும் என அணுகும்போது முன்னாள் முத்திரை ஆய்வாளர் கார்த்திகேயன் அலுவலகத்திலேயே ரூ.200/- பெற்றுக்கொண்டு முத்திரையிட்டு தந்துள்ளார். அதற்கான சான்றும் எங்களிடம் உள்ளது. தற்போது ஏன் நீங்கள் ஸ்தல முத்திரையிட ரூ.400/- கேட்கின்றீர்கள் என உரிமையாளர்கள் வாதம் செய்கின்றனர். இதனால் எங்களால் பழுதுபார்க்கும் தொழில் செய்ய சவாலாக உள்ளது. கஜா புயல் அடித்து தற்போதுதான் மீண்டுள்ளோம். இப்போது முன்னாள் முத்திரை ஆய்வாளரின் தவறான நடவடிக்கையால் எங்களால் மீளமுடியவில்லை. இதில் எது சரியான கட்டணம் என்று வணிகர்களுக்கும், எங்களுக்கும் குழப்பமான சூழ்நிலை எழுந்துள்ளது. இந்த புகாருடன் இதற்கான முத்திரை சான்றிழிதலை இணைத்துள்ளோம். எனவே குறைவான கட்டணம் வசூலித்து அரசுக்கு வருமான இழப்பு செய்த முன்னாள் முத்திரை ஆய்வாளர் கார்த்திகேயன் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும், இவர் தஞ்சாவூர் முத்திரை ஆய்வாளர் சரகத்தில் வேலை செய்தபோதும் இதுபோன்ற நிகழ்வுகள் அதிகம் நிகழ்ந்துள்ளது. தேவைப்படின் அதற்கான சான்றிழிதழையும் அனுப்பி வைக்கின்றோம்.

தங்கள் உண்மையுள்ள,
பழுதுபார்ப்போர் நல சங்கம்,
கும்பகோணம்.

**இணைப்பு:-**

முத்திரை சான்றிதழ்கள் (1) 5797980/23.02.17, (2) 5787021/31.3.17.

**நகல்:-**

1. உயர்திரு, சட்டமுறை எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரி அவர்கள்,
   தேனாம்பேட்டை, சென்னை.
2. உயர்திரு, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்கள்,
   திருச்சி.
3. உயர்திரு, தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள்,
   திருச்சி.
4. உயர்திரு, தொழிலாளர் உதவி ஆணையர் (அ) அவர்கள்,
   தஞ்சாவூர்.
5. உயர்திரு, தொழிலாளர் உதவி ஆணையர் (அ) அவர்கள்,
   திருவாரூர்.

Scanned by CamScanner

15

ORIGINAL

Stamping at Office/~~Site~~

GOVERNMENT OF TAMIL NADU

# CERTIFICATE OF VERIFICATION

5797980

SCHEDULE ~~XI~~ VIII

[See Rule ~~16(3)~~ 15(3)]

Office of the ~~Stamping~~ Assistant / Deputy Inspector of Labour

The Standards of Weights and Measures (Enforcement) Act, 1985.

No. TN - 479

Certificate No.

Date 28.2.17

Book No.

certify that I have this day verified and stamped/~~rejected~~ the undermentioned Weights, Measures, etc., belonging to

Registration No. as user under the above Act

| Weights | Measures | Capacity | Class | Manufacturer | Type | Measuring Instruments (8) | Verification Fee (9) | Carriage, conveyance adjusting charges, etc (10) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Make | Model | Max | Min | e | Class | M.No |
| Eagle | E016 | 600g | 2g | 100g | II | 744224 | 2.00 | |

50%. 100-
con. 100

46216344 Dated 22.2.17

Stamped

22.

Assistant Commissioner / Inspector of Legal Metrology

This certificate is to be exhibited in accordance with the procedure laid down in Rule 22.

Scanned by CamScanner

17

GOVERNMENT OF TAMILNADU

# CERTIFICATE OF VERIFICATION

5787021 ORIGINAL

SCHEDULE - [illegible]

[See Rule [illegible] (3)]

Office of the Stamping / Assistant / Deputy Inspector of Labour ........ எடைமுறை கட்டுப்பாடு அலுவலர் ........

The Standards of Weights and Measures (Enforcement) Act, 1985.

ID. [illegible] Inspector [illegible]

Stamp Office : [illegible]

No. TN- 479

Certificate No.

Date : 31·3·2017

Book No. :

I hereby certify that I have this day verified and stamped/rejected the undermentioned Weights, Measures, etc., belonging to [illegible]

...ty .............. Registration No. as user .............. under the above Act.

| Quantity | Denominations: Weights | Denominations: Measures | Weighing Instruments: Capacity | Weighing Instruments: Class | Weighing Instruments: Manufacturer | Weighing Instruments: Type | Measuring Instruments | Verification Fees | Carriage, conveyance adjusting charges, etc. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | GAS / | PR | 30 kg | 10 g | [illegible] | III | 15075456 | 200 | [illegible] |

[illegible] ...... Deposited on Cash Receipt No. [illegible] Dated 31·3·17

...d by ...... ESSAR ...... (Licence No.)

...rification due on 31·3·2018 A.

...ed the articles duly stamped / rejected

Signature.

Assistant Controller/Inspector of Legal Metrology

எடைமுறை [illegible] அலுவலர்

[illegible]

The Certificate of Verification is to be exhibited in accordance with the procedure laid down in Rule 23.

5—335-2—20,000 Bks.—7-11-66 (P3-3)

Scanned by CamScanner

[redacted]ப்3/44025/2018

தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை–6, நாள்.21.11.2019.

<u>குறிப்பாணை</u>

பொருள்: புகார் – திரு.கார்த்திகேயன், முன்னாள் முத்திரை ஆய்வர், கும்பகோணம் என்பவர் மீதான புகார் – தொடர்பாக.

பார்வை:

1. பழுதுபார்ப்பவர்கள் நல சங்கம், கும்பகோணம் என்ற பெயரில் பெறப்பட்ட புகார் மனு, நாள்.இல்லை.
2. சீர்காழி, தாலுக்கா வணிகர் சங்க உறுப்பினர்கள் என்ற பெயரில் பெறப்பட்ட புகார் மனு, நாள். இல்லை.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட குறிப்பாணை நாள்.13.12.2018 மற்றும் 03.05.2019.
5. சீர்காழி வணிகர்கள், நாகப்பட்டினம் மாவட்டம் என்ற பெயரில் பெறப்பட்ட புகார் மனு, நாள் இல்லை.
6. அரசு கடித எண்.21305/இ2/2019–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.11.11.2019.

*******

பார்வை 4–ல் காணும் குறிப்பாணையின் தொடர்ச்சியாக, பார்வை 5–ல் காணும் புகார் மனு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதில் தெரிவித்துள்ள புகார் தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டு ஒருங்கிணைந்த அறிக்கையினை அனுப்புமாறு அன்னார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : மேற்படி

தொழிலாளர் ஆணையருக்காக

22.11.19

பெறுநர்

தொழிலாளர் இணை ஆணையர்,
திருச்சி.

Scanned by CamScanner

அனுப்புதல்,

சீர்காழி வணிகர்கள்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

பெறுதல்,

திரு.சண்முகம்,
காவல்துறை கண்காணிப்பாளர்,
லஞ்ச ஒழிப்புத்துறை,
293, MKN ரோடு,
கலக்டர்ஸ் நகர்,
ஆலந்தூர்,
சென்னை-16.

038916
- 5 NOV 2019

மதிப்பிற்குரிய அய்யா,

எங்களது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். தற்போது சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் ம.கார்த்திகேயன் என்பவர் அவர் பணிபுரியும் சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வாளர் எல்லையில் உள்ள கடைகளில் உள்ள வணிகர்களை ஆய்வுக்கு வந்து மிரட்டி லஞ்சம் பெற்று வருகிறார். கொடுக்கவில்லை எனில் ரூ.100/- அல்லது ரூ.200/- என பழைய அதிகாரிகளால் வழக்கமாக வசூலிக்கப்படும் அபராதம் தொகையினை 10 மடங்கு அல்லது 50 மடங்கு அல்லது 100 மடங்கில் அவரது அலுவலகத்திற்கு வரச்சொல்லி கால் மேல் கால் போட்டுக்கொண்டு அதிகாரமாக கேட்டு லஞ்சம் வாங்குகிறார்.

இவர் 2017 ஆம் ஆண்டு இறுதியில் சென்னை செயிண்ட் தாமஸ் மவுண்ட் முத்திரை ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் லஞ்ச ஒழிப்பு துறையின் அதிரடி சோதனையில் சிக்கி வழக்கு நாளது தேதி வரை நிலுவையில் இருக்கும் நிலையில் அப்போதைய லேபர் கமிஷ்னர் ஆர்டரின்படி சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணியிடம் மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இவருக்கு லஞ்ச ஒழிப்பு துறையினரால் Non Sensitive Post-ற்கு மாற்றம் செய்ய பரிந்துரைக்கப்பட்டும், Sensitive Post-ஆன சீர்காழி தொழிலாளர் உதவி ஆய்வராக பணிமாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவது வணிகர்களாகிய எங்களுக்கு மிகமிக சிரமமாக உள்ளது. இவருடைய லஞ்ச மிரட்டல் உச்சத்தை எட்டியுள்ளது.

Scanned by CamScanner

22



உமாதேவி என்பவர் சென்னை பணியாளர் நிர்வாக தொழிலாளர் இணை ஆணையராக பணிபுரிந்த போது தொழிலாளர் துறையை சேர்ந்த பல அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு பணியிட மாறுதல் வாங்கித் தந்து பல கோடிரூபாய் சம்பாதித்துவிட்டார். ஆனால் அந்த அம்மா பெயரைச் சொல்லித்தான் இவர் பணம் வாங்கினார்.

அந்த அம்மாவிடம் 4 ல் 1 பங்கை கொடுத்துவிட்டு மீதி பணத்தை இவர் சுவாகா செய்துவிட்டார். அந்த பணத்தை கொண்டு தான் FLORIAN என்ற அழகு சாதன நிலையத்தை சென்னை ஊரப்பாக்கத்தில் துவங்கி அங்கே மசாஜ் என்ற பெயரில் விபசாரம் தொழில் செய்து நன்றாக பணம் பார்த்து வருகிறார்.

தற்போது கூட சென்னையில் பிரதான இடத்தில் மீண்டும் ஒரு மசாஜ் நிலையம் மற்றும் பார் ஒன்றை துவங்க Agreement போட்டு ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகிறது.

இவர் தொழிலாளர் துறையில் சார்நிலை அலுவலர் சங்கத்தில் குறுக்கு வழியில் ஜனநாயக முறைப்படி தேர்தல் ஏதும் இல்லாமல் பொதுச் செயலாளராக பதவியில் இருந்து வருகிறார். இந்தப்பதவியை வைத்துக் கொண்டு அவர் பணிபுரியும் துறையில் உள்ள மேலதிகாரிகளை மிரட்டுவதும், அவர்கள் மீது பொய்யாகவும், அவதூறாகவும் புனைக்கப்பட்ட புகார்களை எழுவதும், அதனை வைத்து அவர்களை மிரட்டுவதும் அவருக்கான வாடிக்கையான பொழுதுபோக்காகும்.

இத்துறையில் கருணை அடிப்படையில் பணி செய்பவர்கள் மிகமிக அதிகம். ம.கார்த்திகேயனும் கருணை அடிப்படையில் வேலைக்கு வந்தவன்தான். இவன் கருணை அடிப்படையில் இத்துறையில் வந்து பணிபுரியும் நபர்களுடன் Network வைத்துக்கொண்டு அவர்கள் உதவியுடன் துறையின் பெயரை களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறான். லஞ்ச ஒழிப்பு துறையால் அதிரடி சோதனையில் சிக்கியவன். துறை ரீதியாக இவன் மீது எந்த ஒரு நடவடிக்கையும் நாளது தேதி வரை எடுக்கப்படவில்லை.

இவன் சாயங்காலம் ஆனால் விடிய விடிய குடிப்பான். விடிந்தும் குடிப்பான். போதையிலேயே இருப்பான். ஆபிசில் தூங்குவான். கதவு தாழ்பால் போட்ட நிலையில் தட்டினால் வெளியே வந்து போதையில் பாரம் VA வாங்குவான். மீண்டும் மது அருந்தி தூங்குவான். நோட்டை கொடுத்து பாரம் வாங்கியதற்கு கையெழுத்து கேட்டால் குடுத்துட்டல போ என்று ஒருமையில் பேசுவான். பெரும்பாலும் சென்னையில் தங்கி அழகு நிலையத்தை கவனித்து வருகிறான். அலுவலகத்திற்கு வருவதில்லை.

Scanned by CamScanner

23



ஏற்கனவே இவன் கும்பகோணத்தில் பணிபுரிந்த போது இவன் செய்த அநியாயம், அக்ரமம் பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது. நடவடிக்கை ஒன்றுமே இல்லை. ஆனால் துறை இவனை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறது.

இவன் மீது நேரில் புகார் கொடுத்தால் ஆள் வைத்து மிரட்டுவான், அடிப்பான், உதைப்பான். இவனது சொந்த காரை வைத்து மோதி எதையும் செய்வான். இந்த அக்ரமகாரன் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்காவிடில் அவனை நாங்களே கூட்டாக சேர்ந்து அவனுக்கு பாடம் கற்பிக்க தயங்க மாட்டோம். இந்த மனுவில் எங்களது கையொப்பம் இல்லை என்று நினைக்காமல் இதில் உள்ள உண்மைகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என நம்பிக்கையுடன் புகாரினை முடிக்கின்றோம்.

இங்ஙனம்,
சீர்காழி வணிகர்கள்.

Copy To
தொழிலாளர் ஆணையர் அவர்கள்
DMS வளாகம்
தேனாம்பேட்டை
சென்னை.

Scanned by CamScanner